களுக்குக் கடன் கொடுக்காததால் அந்த ரூலை நெகிழ்த்தித் தொழிலாளர்களுக்குக் கடன் கொடுக்கும்படியாக வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: எந்தெந்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ அந்தந்த நடவடிக்கை களெல்லாம் எடுக்கப்பட்டு வருகின்றன.

DR. H. V. HANDE: What is the extra commitment for the Government under this head? Are the Government going to implement this from the present financial year May I know whether grants have been made in the present budget for this item?

THE HON. THIRU K. A. MATHIALAGAN: This has come into effect from 18th May 1958. It has retrospective effect. As for the amount involved, I want notice.

திரு. சு. துரைசாமி: போனைத் தலைவரவர்களே, தொழிலாளர்கள் வருங்கால வைப்பு நிதி, 20-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் இருக்கக்கூடிய தொழிற்சாலைகளில் மட்டும்தான் அமுல்படுத்துகிறது அதை மற்றத் தொழிலாளர்களுக்கும் அமல்படுத்த மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: அதனுடைய விளைவுகளை யோசித்து வற்புறுத்தப்பட வேண்டிய அம்சம்.

திரு. கே. பி. எஸ். மணி: சார், பேக்டரிகளிலேயும், மற்றைய அலுவலகங்களிலும் தொழிலாளர்களாகக் கருதி உதவி செய்யப் படுகிறது. அதே நோக்கில் சர்க்காரில் ஊழியம் செய்து தொழிலாளர்களாகவோ அல்லது என்.ஜி.ஓ.-க்களாகவோ சேராது National Malaria Eradication Programme -இல் கிட்டத்தட்ட 5,000 பேர்கள், 15 வருஷங்களாகச் சர்வீஸ் செய்தும்கூட தினக் கூலிகளாகக் கருதப்படுகிறார்கள். அவர்களும் தொழிலாளர் வர்க்கத்தில் சேர்க்கப்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: தனிக் கேள்வி போடவும்.

கொப்பனுபட்டியில் வீட்டு மனைகள் ஒப்படை.

*** 660 வின—புலவர் பொ. பொன்னம்பலம்:** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) திருமயம் தொகுதியிலுள்ள கொப்பனுபட்டியில் முஸ்லீம்கள் வாழும் பகுதியில், மனைக்கட்டு இடங்கள் அவர்களுக்கு அடமானம் செய்து கொடுக்கப்பட்டுள்ளனவா?

(ஆ) ஆமெனில், அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: (அ) இல்லை.

1970 ஏப்ரல் 3]

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

புலவர் பொ. பொன்னம்பலம் : மதிப்பிற்குரிய பேரவைத் தலைவரவர்களே, திருமயம் தொகுதியிலுள்ள கொப்பனாபட்டி முஸ்லீம்கள் வாழும் பகுதி. அரசாங்கத்திற்குச் சொந்தமான புறம்போக்கு இடம் கிடைக்கிறது. அங்கு முஸ்லீம்கள் மிக அதிகமான எண்ணிக்கையில் வாழ்கிறார்கள். அவர்கள் பல ஆண்டுகளாக நிலத்தை அடமானம் செய்துதர வேண்டுமென்று கோரி வருகிறார்கள். இன்னும் அடமானம் செய்யாமல் இருப்பதால் அரசு விரைவில் அந்த இடத்தை அடமானம் செய்ய நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா என்று அறிய விழைகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அங்கு இடமிருந்து கேட்கும்படியான நிலைமையிருந்தால், இந்த அரசாங்கத்தின் கொள்கை எவ்வளவு தூரத்திற்கு நிலமில்லாத விவசாயிகளுக்கு நிலம் கொடுக்கவும், வீட்டு மனையில்லாதவர்களுக்கு வீட்டு மனை கொடுக்கவும் அரசாங்கத்தின் கொள்கையாக இருக்கிறது. அந்தத் திட்டத்தை ரொம்பத் தீவிரமாக அமல்படுத்துவதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் அறிவார்கள். கொப்பனாபட்டியைப் பொறுத்த வரையிலும் முஸ்லீம்கள் சொல்லும் இடத்திலே இடம் இருந்தால் கண்டிப்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) அறிவிப்புகள்.

(அ) அரசினர் உறுதிமொழிக் குழுவிற்கு நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ் நாடு சட்டப் பேரவையின் 214 (1)-வது விதியின் கீழ் 1970-71-ம் ஆண்டுக்கு பின்வரும் சட்டப் பேரவை உறுப்பினர்களை அரசினர் உறுதி மொழிக் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கிறேன் :—

1. திரு. மா. இராசாங்கம்
2. திரு. எஸ். முருகையன்
3. திரு. எம். மேத்தா
4. திரு. எ. கோ பாலகிருஷ்ணன்
5. திரு. வீ. மலைக்கண்ணன்
6. திரு. மு. மாரிமுத்து
7. திரு. கே. விநயகம்
8. திரு. கே. எஸ். கோதண்டராமையா
9. திருமதி கே. பி. ஜானகியம்மாள்